தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் உ௩	திருவள்ளுவர் ஆண்டு ௧௯௭௮ சருவசித்து—மார்கழி 1947—திசம்பர்	மலர் ௯

மகிழ்ச்சி.

தமிழ்ப் பேராசிரியர்,

மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் உருவச் சிலை நாட்டு விழா.

தமிழ்த் தாயின் திரு மைந்தர்களுள் ஒருவ ராகிய ஐய ரவர்கட்குச் சென்னை இராச தானிக் கலாசாலையில் 1948, மார்ச்சு, 7-ஆம் நாள் கலையியல் துறைத் தலைவர் திவான் பகதூர் வீரத்திரு. பேரறிஞர் ஆ. இலக்குமண சாமி முதலியார் அவர்கள் தலைமையில் உருவச்சிலை நாட்டு விழா நிகழ்ந்தது. அரசியற் றுறைத் தலைவர் திரு. ஓ. பி. இராமசாமி ரெட்டியார் அவர்கள் உருவச்சிலையைத் திறந்து வைத்தார்கள். தமிழ் நாட்டு விழா வாகித் தமிழ் மக்கட்கெல்லாம் மிக்க மகிழ்ச்சியளித்தது.

அவ்விழா நிகழ்ச்சிக்கு ஆம் முயற்சிகள் புரிந்த செயலா ளர்கள், பொருள் முதலிய உதவிகளைச் செய்த திருவாளர்கள், விழா அவையினைச் சிறப்பித்து நிகழ்த்திய அவைத் தலைவர்கள், பாராட்டுரையாளர்கள், அவையோர் முதலியோர்க்கெல்லாம் தமிழ்த் தாயின் வாழ்த்தும், தமிழுலகத்தார் நன்றியறிவும் உரிய வாகும்.

பற்பல ஆண்டுகளின் முன்னரே, இச்சங்கத்தே ஐயரவர்கள் ஓர் ஆண்டு விழாத் தலைமை தாங்கிய காலத்தே, இச்சங்கம்,

திருமேவு தமிழ்த்தாய்பாற் செய்தவங்கள் பலகோடி திரண்டு வந்தோர்
உருமேவி யுற்றவென உத்தமதா னச்சீரூர் உற்றோய்! வாழி!
தருமேவி வளர்கரந்தைத் தமிழ்ச் சங்கப் பேரன்பா! தமிழர் தங்கள்
பெருவாழ்வே! வருக இவண்! பெரியோனே! வருக! தமிழ்ப் பேறே! வாழி!

என்று தொடங்கிச் செல்லும் வாழ்த்துப் பாவில்,

கலைகாட்டித் தாய்மொழியின் கவின்நாட்டும்மின்கொண்டைக் காட்டும் ஒன்றை
மலைகாட்டு மேனாட்டில் வாய்ந்திட்டார் உளராயின் மன்முன் யாரும்
அலைகாட்டு நிதிகூட்டி அவர்நூலே மனைக்கேற்ற அணியாக் கொண்டு
சிலைநாட்டித் தெருத்தோறும், தெய்வமாக் கொண்டுவிழாச் செய்வ ரன்றே

என்று கூறியிருப்பது கொண்டே, ஐயரவர்கட்கு இத்தகைய உருவச் சிலைகள் நாடெங்கும் நாட்டி, விழாக் கொண்டாட வேண்டிய நம் தமிழ் மக்கள் கடமையை எடுத்துக் கூறி, வேண்டிக் கொள்ளும் குறிப்பினை வெளியிட்டுளது. இச் சங்கப் பெருமன்றத்தே யுள்ள அவர்கள் உருவப்படக் காட்சி, நாளும் கண்டு மகிழ்வார்க் கெல்லாம் அவர்களது உருவச் சிலை யமைப் பிற் குரிய நற்கால வரவினைக் காட்டி மகிழ்விக்கின்றது. தமிழ் உலகப் ஐயரவர்கட்கு எங்கெங்கும் ஏற்ற பெற்றி, உருவப் படம், உருவச் சிலைகள் அமைத்துக் கொண்டாடி மகிழ்ந்து வரும் கடப் பாட்டினை மேற்கொண் டெழுவது, பாராட்டி மகிழ்தற் குரிய தாகும்.

கரந்தைக் கவியரசு வே.

செல்வம் அவர்கள் நினைவு.

சங்கப் பேரன்பர், புகழ் உருவாளர், இராவ் பகதூர் வீரத்திரு, A. T. பன்னீர்ச் செல்வம் அவர்கள் நினைவு நாளின் சிறப்புக் கூட்டம் ஒன்று, அண்மையில் தஞ்சையில் நிகழ்ந்தது. நம் சங்கத் தலைவர் அவர்கள் தலைமை தாங்கினர். அவர்கள் தலைமை யுரை இவ் விதழில் பிறிதோ ரிடத்தில் வெளிவந்துளது. விரிவுரையாளர்கள், செல்வம் அவர்களது அரிய குணம் செயல்களையும், அவர்களது தமிழ்மொழிப் பற்றினையும், அதன் ஆக்கங் கருதி அவர்கள் செய்த வள்ளன்மையினையும், அவ்வாறே தமிழின் ஆக்கங் கருதுவார் செயத் தகும் கடமைகளையும் விரித்துரைத்தனர். அத்திருநாட் கூட்டத்தில் பேசிய அன்பர், திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள், செல்வம் அவர்களின் மனம், சொல், செயல்கள் உண்மை நெறிப்பட்டு உயர்ந்தோங்கிய நிலையில் நிகழ்ந்த பல நிகழ்ச்சிகளையும், அரிய தமிழ்த் தொண்டுகளையும் விரித்துக்காட்டி வந்தவர், இறுதியாகச் செல்வம் அவர்கள், அரசியல் நெறியில் மேனாட்டுக்குச் சென்ற காலையும் அத் தொண்டினை விடா துட்கொண்டு, அந் நாட்டினர்க்குத் தமிழின் சிறப்பினை அறிவிக்கத், தமிழவேள் அவர்களிடம் பல அரிய செந்தமிழ் நூல்களைப் பெற்றுச் சென்றதும், அவ்வாறே, மேலுலகத்திலும் தமிழ்ப் பற்றுடன் சென்றிருப்பதும் கூறி முடிக்குங்காலை, அவையோர் மிக்க இரக்க முற்றனர்.

இளங்கோ வடிகள் தமிழ்க் கழகம்

(கரந்தைப் புலவர் கல்லூரி)

இக் கழகத்தின் பத்தாவது ஆண்டு விழா, சருவசித்து, மாசி, ௰௭ ஆம் நாள் (29-2-1948) ஞாயிறு மாலை ௫ மணிக்குத், தமிழ்ப் பெரு மன்றத்தில், மிகச் சிறப்பாக நிகழ்ந்தது.

திருச்சிராப்பள்ளி வழக்கறிஞர், திரு. தி.பொ. வேதாசலம் பிள்ளை அவர்கள் தலைமை ஏற்றனர்.

கடவுள் வழிபாடு, தமிழ்த் தாய் வணக்கங்களின் பின், அவையோரெல்லாரும் எழுந்து நின்று, காந்தி அடிகளாரை நினைந்து வணங்கி யமர்ந்தனர்.

கரந்தைப் புலவர் கல்லூரித் தலைவர், கரந்தைக் கவியரசு திரு. அரங்க. வேங்கடாசலம் பிள்ளை அவர்கள் பொதுவாக அவையோருக்கும், சிறப்பாகத் தலைவருக்கும் வரவேற்புக் கூறினார்கள்.

கழக அமைச்சர், திரு. மா. சுப்பிரமணியம் ஆண்டறிக்கைப் படித்தார். பெருமை மிக்க கல்வி யமைச்சர், திரு. T. S. அவிநாசிலிங்கம் செட்டியார் அவர்கள் முதலான செந்தமிழ்த் தொண்டர்கள் பலர் அனுப்பிய வாழ்த்துக்களும் படிக்கப் பெற்றன.

தலைவ ரவர்கள், நாடும், மக்களும், சமுதாய வாழ்க்கையும், பொருளாதாரத் துறையும் செம்மை யுறுதற்காம் வழி துறைகளை விரித்துரைத்து விளக்கினார்கள்.

பின்னர், அண்ணுமலைப் பல்கலைக் கழக விரிவுரையாளர், திரு. G. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள், M.A., B.L., 'இளைஞர் உலகு' என்பது பொருளாகவும், 'தமிழர் நாடு' ஆசிரியர், திரு. கி. ஆ. பெ. விசுவநாத பிள்ளை அவர்கள் 'முத்தமிழ்' என்பது பொருளாகவும், அறிவு தரத்தக்க சிறந்த சொற் பொழிவுகள் ஆற்றினுர்கள்.

கரந்தைப் புலவர் கல்லூரி மாணவர்கள் சங்கத்தின் பால் என்றும் தொடர்பு கொண்டு பணி செய்வதென உறுதி கொள்ளும் முறையில், கழக அமைச்சர், கீழ்க் காணும் முடிபினைத் தம் தோழர்முன் முன்மொழிந்து கூற, கல்லூரி மாணவர்கள் எல்லோரும் இதனை ஒரு மனதுடன் ஒப்பி, நிறைவேற்றி, அதன்படி நடக்க உறுதிகொண் டார்கள்.

"கரந்தைப் புலவர் கல்லூரியில் பயின்று, வித்துவான் பட்டம் பெற்றுச் செல்லும் ஒவ்வொரு மாணவரும், கல் லூரியை விட்ட நாளிலிருந்தே கரந்தைத் தமிழ்ச் சங்க உறுப்பினராகவும், தமிழ்ப்பொழில் உறுப்பினராகவும் ஆவதோடு, வேலையில் அமர்ந்த மூன்றுண்டுகட்குள் குறைந்தது வேறு ஐந்து உறுப்பினர்களையாவது சங்கத்திற் கும், பொழிலுக்கும் உறுப்பினர்களாகச் சேர்க்க வேண்டு மென இக் கழகச் சார்பாக நாங்கள் முடிவுசெய்து, உறுதி கொள்கின்ருேம்."

தலைவர் முடிப்புரைக்குப் பின், நன்றி கூறுதலுடனும் வாழ்த்துடனும் ஆண்டு விழா இனிது நிறைவுற்றது.

தமிழர் கழகம்

(தஞ்சைக் கிளை)

1948, மார்ச்சு, 1 பன்னீர்ச்செல்வம் நினைவு நாட் கூட்டத்தில்

திருவாளர் முத்தமிழ் வள்ளல், இராவு பகதூர்,

A. Y. அருளானந்தசாமி நாடார் அவர்களது

தலைமையுரை

தமிழ்ப் பெருமக்களே!

வீரத்திரு. இராவு பகதூர் பன்னீர் செல்வம் அவர்களது நினைவு நாட் கூட்டத்தில் கலந்து கொள்வதில் எனக்கு மிகவும் விருப்பு. இக் கூட்டத்தைக் கூட்டிய நண்பர்களுக்கு அது தெரியும். அதனாலே என்னைக் கேட்காமலே எனக்கு இன்று தலைமை ஏற்கும் பணியைக் கொடுத்தார்கள். பின்னர் அறிவித்தார்கள். நானும் விருப்புடன் ஏற்றுச் சென்னையிலிருந்து வந்தேன்.

செல்வம் அவர்கள் உங்களுக்குத் தெரியாதவர் அல்ல. இந்த நகர ஆட்சியைச் சில ஆண்டுகள் நடத்திவந்தார்கள். இது அவர்கள் பொது வாழ்வைத் தொடங்கிய காலம். இந்தச் சில்லாவின் கல்விக் கழகத்தின் துணைத் தலைவராகவும், பின்னர் தலைவராகவும் தொண்டு செய்தார்கள். தஞ்சை சில்லா போர்டின் துணைத் தலைவராகவும், பின்னர் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு மேலாகத் தலைவராகவும் இருந்து பணியாற்றினார்கள். அவர்களது ஆளுந்திறமை வியக்கத்தக்கது. ஆட்சியாளர் மெச்சியது. பொதுமக்கள் பாராட்டியது. அரசியல் சீர்திருத்தம்பற்றி ஆராய வந்த 'சைமன் கமிஷன்' சில்லா போர்டு கூட்டங்கள் சிலவற்றைப் பார்வையிட்டார்கள். அவற்றுள் தஞ்சை சில்லா

போர்டின் கூட்டம் ஒன்று. அக்கூட்டத்தை நம் செல்வம் அவர்கள் நடத்திவைத்த நேர்மையைக் கண்டு வியந்தனர் சைமன் முதலியோர். அவர்களுடைய ஆட்சியிலே நீதி நிலவியது. தஞ்சை சில்லா போர்டு ஆளுகையி லுள்ள தஞ்சை அரசரது அற நிலையங்கள் உண்மையான அற நிலையங்களாக ஆயின. இந்த அற நிலையங்களில் நடத்தப் பட்டுவரும் பள்ளிக்கூடங்கள், எல்லா வகுப்பாரும் படிக்க இடங்கொடுத்தது, நம் செல்வம் அவர்களது ஆட்சியில்தான். திருவையாறு 'கல்யாண மஹால்' அறச்சாலை தமிழை வளர்க்கத் தலைப்பட்டது, நம் செல்வம் அவர்களது ஆட்சி யில்தான். 'சிரேயஸ் சத்திரம்' ஆதி திராவிட மாண வர்களுக்கு உணவும், உறையுளும் தந்துதவத் தலைப்பட் டது, நம் செல்வம் அவர்கள் ஆளுகையில்தான். சில்லா போர்டு ஆட்சியை நடத்துவதற்கு ஊழியர்களாக (அதா வது, செகரட்டிரி, சத்திரம் சூப்பிரிண்டெண்டெண்டு, சத்திரம் தாசில்தார் ஆகிய பெரிய அலுவலாளர் முதல் தாளாளர்கள் வரையி லுள்ள எல்லாப் பதவிகளிலும்) இருந்து அலுவல் நடத்தத் தமிழப் பிள்ளைகள் எல்லாருக் கும் திறனுண்டு என்று உலகுக்கு எடுத்துக் காட்டிய வர், நம்செல்வம் அவர்கள்தான்.

ஆசிரியர்க ளாகட்டும், மருத்துவர்க ளாகட்டும், எஞ்சி னிய ராகட்டும், வேறு எந்த அலுவலாள ராகட்டும், தத்தம் கடமையிலிருந்து வழுவ முடியுமா? அவர்களுடைய ஆட்சியிலே, பாட்டை வசதிகள் எவ்வளவோ ஏற்பட்டன; பள்ளிக்கூடங்கள் பெருகின; மருத்துவச்சாலைகள் மலிந்தன; இன்னும் எத்தனையோ பொதுத் தொண்டுகள் சிறந்தன. நீதியும், நேர்மையும் சிறந்து விளங்கியது, அவர்களது ஆட்சியில்.

சென்னைச் சட்ட சபையில் நம் செல்வம் அவர்களது வாதம் எல்லோரும் மெச்சும் முறையில் இருந்து வந்தது. சட்டங்கள் அமைப்பதிலும், திருத்தப்படுவதிலும் இவர்

களது ஆட்சி அனுபவம் பெரிதும் பயன் பட்டது. சென்னை ஆட்சியில் உள்நாட்டு அமைச்சராக இருந்து திறம்பட ஆட்சி செய்தார்கள்.

தமிழரது வாழ்வு தன் வாழ்வு எனவும், தமிழின் ஆக்கம் தன் ஆக்கம் எனவும் கருதி உழைத்தார்கள். கட்டாய இந்தியை எதிர்த்துத் தமிழர்கள் நடத்திய போராட்டத்தில் தளபதியாக விளங்கியவர்கள் நம் செல்வம் அவர்களாவார்கள்.

அரசியல் சீர்திருத்தம்பற்றி இலண்டனில் கூடிய வட்ட மேசை மாநாட்டில் தமிழர் நலனுக்காக வாதாடினார்கள். ஆங்கில ஆட்சியில் இந்தியா மந்திரிக்குத் துணைவராக நியமிக்கப்பட்டு, இலண்டன்மாநகருக்குப் புறப்பட்டுச் சென்ற போது, 'தமிழர் நலனுக்கு உழைப்பேன்' என்று உறுதி கூறிப் புறப்பட்டார்கள். காலன் வழியிலே காத்திருந்தான். அவர் ஏறிச் சென்ற வான ஊர்தியோடு அவரைக் கொண்ட ஓமான் கடலைத் தமிழர்கள் மறக்க முடியாது. தனிப் பெருந் தலைவரை இழந்த தமிழர், தாயை இழந்த சேயைப்போல், தவித்தார்கள்.

தமிழர் மன முடைந்து போகிறவர்க ளல்லர் அவர்கள் செய்த பணியைத் தொடர்ந்து செய்வாராயினர். இன்று தமிழ் நாட்டிலே நமது செல்வம் இல்லாத இடம் இல்லை ஒவ்வொரு தமிழ் இளைஞரும் ஒவ்வொரு பன்னீர்ச் செல்வமாக விளங்குகிறார்கள். அவரது அரசியல் எதிர்க் கட்சியிலும் எண்ணிறந்த பன்னீர்ச் செல்வங்கள் தோன்றி விட்டார்கள்.

இது நல்ல அறிகுறி. தமிழ் நாடு தமிழர்க் காகும் நாள் அணுகிவிட்டது. நன்றாக.

வணக்கம்.

ஏழுமையும் ஏமாப்பு.

திரு. K. சோமசுந்தரம் பிள்ளை, B. A., B. L., தஞ்சை.

மக்கள் எனப்படும் உயிர்கள், உலகின்கண் வாழும் ஏனைய எண்ணிறந்த உயிர்ப் பாகுபாடுகளில் ஒன்றிற் சேர்ந்தனவாயினும், அவை, பகுத்தறிவினுன், நல்லது, பொல்லது இன்னதென்று மனத்தால் நினைத்துத், தீயனவற்றை விலக்கி, நல்லனவற்றைக் கைக்கொண்டொழுகும் உயர்ந்த கடப்பாடும் ஒருங்கே உடையனவா யிருத்தலான், பொறிகளான் அறியும் அறிவினை யுடைய உயிர்கள் எல்லாவற்றையும் விட மிகச் சிறந்தனவாகக் கொள்ளப்படுகின்றன. மக்களுயிர்கள் இறப்புப் பிறப்புகளின் சிறுமையினைப் பகுப்புணர்வினுலுணர்ந்து, இறைநலம் பற்றி, இறைவனோடியையும் இன்ப நிலையினை அடைதற் கேற்ற பெருமையும் வாய்ந்தன.

இத்துணைப் பெருமையும் தகைமையும் வாய்ந்த மக்களுயிர்கள், இறைவன் தமக்கு மனவுணர்வைச் சிறப்பாக அமைதர உதவியதன் நோக்கம் யாதென நினையாதும், தமக்குப் பிறவிகள் வினை தர வருதலின், அப்பிறவி நீக்கத்திற்கு வினைகளின் நீக்கம் இன்றியமையாது வேண்டப்படுமென்பதையும் உய்த் துணராதும், 'யோசிக்கும் வேளையிற் பசி தீர உண்பதும் உறங்குவதுமாக முடியும்' என உலகஞ் செல்லும் கீழ் நிலையினைப் பற்றிய சிறு வாழ்வை நிலையாக மதித்து, நிலையில் பொருள்களையே ஈட்டுவதில் கண்ணுங் கருத்துமா யிருந்து, மூளை இள ஞாயிறு முதல் விழு ஞாயிறு வரை, பழி பாவங்கள் மேலும் பல இயற்றி, தாமே தமக்கு இன்னலும் விளைத்துக் கொள்கின்றன.

கூர்ந்து ஆயின், மக்களுயிர்கள், தம்மிடத் துள்ளவற்றை விடுத்து, இல்லாத பொருள்களையே நாடி ஈட்டி, வாழ்க்கைக்கு ஒவ்வா நிலையை மேற்கொள்வ தியற்கை. என்னெனில், பிறவி யுள துணையும் துன்ப முளதால், மக்களுயிர்கள் பிறவி தீர்த்து வீடு பெறுவதற் கேற்ற தனித்த உயர் நிலை இன்னதென்று ஓர்ந் துணராது, மன மொழி மெய்

களான் செய்தற்கு அரிதாகிய இன்பத்தைத் தரும் நல் வினைகளை விட்டுச், செய்தற் கெளிதாகிய துன்பத்தைத்தரும் தீவினைகளை விரும்பிச் செய்து, அல்ல லுற்று, அழுங்குகின்றன. இவ்வா றில்லாமல், மனமொழிமெய்களான் தீயன வற்றை அறவே நீக்கி, யாதொரு பழி பாவத்திற்கும் இட னின்றி, வாழ் நாள் முழுவதும் தத்தங் கடப்பாடுகளை, அறநிலையில், ஒழுங்குறப் புரிந்து செல்லும் துணிவும் செப்பமு முடைய மக்களுயிர், தம தறிவு, இச்சை, செய்கைகளைப் பேரின்பப் பொருள் தேடும் முயற்சியிலே புகுத்தி, இறைவன்பாற் படுத்தின், அவ்வுயிர்கள் துன்பம் நீங்கி, வீட்டின்ப மடையும் என்பது தமிழகப் பெரியார் ஒழுகலாற்றானும், அருண் மொழிகளானும் உணரலாகும்.

உலகிலே நன்மக்களா யுள்ளாரின் நோக்கங்களும் கொள்கைகளும் எங்ஙனம் உள்ளன என்பதை நன்குணர்ந்து, அவற்றிற் கேற்ப ஒழுகுதலே உலகத்தோடு பொருந்த ஒழுகுதல் என்ற குறிக்கோளைக் கைக்கொண்ட பெருந் தகையார், ஒரு பிறப்பிலே செய்யப்பட்ட வினையின் பயன் எழு பிறப்புந் தொடரு மென்று வரையறுத் துள்ளார். எல்லாப் பிறப்பும் ஒரு வகையில் ஏழா யடங்குதலாலே ('பிறவி யேழு மெழுதா வகை சிதைத்தோன்'— திருக்கோவையார், 79), ஏழு என்ற எண் வழக்கு இறைவன் அருள் வழி கொண்டு யாவற்றையும் இயக்கும் ஆற்ற லுடைய தெனத் தமிழ் மக்கள் சிறப்பாகக் கொண்டிருந்த கொள்கை,

'நெருநற்றுச் சென்றாரெங் காதலர் யாமு
மெழுநாளே மேனி பசந்து' —குறள்

'ஒருநா ளெழுநாள்போற் செல்லுஞ்சேட் சென்றார்
வருநாள்வைத் தேங்கு பவர்க்கு' —குறள்

'எழுநா ளெல்லை யிடுக்கண் வந்தெய்தா' —மணிமேகலை

'இன்றேழ் நாளிந்நகர் மருங்கேவந்து தோன்றும்' ,,

'எழுநா ளெல்லையு ளிரவலர்க் கீந்து' ,,

என்பதனால் நன்கு விளங்குதல் காண்க. மற்றும், இசை ஏழு, அடுக்கு ஏழு, நிலை ஏழு, உலகு ஏழு, மாமழை சொரியும் மங்கு லேழு, வய மேவும் கடலேழு, பெருந் தவமுனிவர் ஏழுவர் என்றவை போன்ற வழக் குண்மைகள் தமிழகத்தில் வழங்கி வந்துள்ளமை காண்க.

சான்ருேரால் உடன் பாடாகக்கொண்ட நற்குணங்களைக் குறைவின்றிக் கொண்டு, தத்தம் கடப்பாடுகளைத் துணிவுற மனத் திட்பங் கொண்டு ஆற்றுபவர்க்கு, அத்தகைய குணங் களே அன்னவர்க்கு ஏம மாகும். என்னெனின், அச் சான் ருேர்கள் உள்ளுவ தெல்லாம் உயர்வு உள்ளுதலான், அவரது நினைவுக் கருவியான மனம் தூயதாய்ச், சிறப்புற்று விளங்கும். அதனுன், அவரது உயிரும், உயிரின் எண்ணங்களும், தூயவாய், ஆற்றல் கொண்டு, திகழ்ந்து, மிளிரும். இங்ஙனம் தோன்றும் தூய எண்ணங்களை யுடைய சான்ருேர்க்குப், பிறர் நினைக்கும் தீய எண்ணங்கள், இவர்பால் வந்துறுது தடைசெய்தற்குச், சால்புடையோர் சால்பு எனும் பண்பு நற்குணங்கள் அரண் போலிருந்து அன்னுரைக் காக்கும். நற்குணங்களா லெழுந்த மன உயர்ச்சியும், மன அகலமும், மனத் திண்மையு முடைய ஒருவர், தன்னைத் தீய குணங்கள் கிட்டுதற்கு அருமையாகவும், ஆக்கிக் கொள்வா ராதலான், உயர்வு, அகலம், திண்மை, அருமையாய இந்நான்கினது அமைதி யுடையது அரணென்க. மன அமைதி ஒருவர்பால் இல்வழி, அவருக்கு அவரது நற் குணங்களாகிய அாணுற் பயனில்லை. எனவே, உயர்ந்தவர் தமக்குப் பயன் றரும் ஏம மாகக் கொள்வது யாதென இனி நோக்குவாம்.

சான்ருேர், தமக்கு ஏம மாக, உறுதிப் பொருளாய அறம் பொருள் இன்பங்களிற் பிறர் பழியாம லொழுகுத லாகிய நாணினைக் கைக்கொள்வர்.

'நாண்வேலி கொள்ளாது மன்னே வியன்ஞாலம்
பேணலர் மேலா யவர்'

என்பது திருவள்ளுவர்தம் பொய்யா மொழி. 'நலம் வேண்டின் நாணுடைமை வேண்டும்.' நாணென்னும் நன்மையைக் குறித் தது சால்பாதலின், சான்ருேர்க்கு நாணுடைமையே ஏற்ற அணியாகும். பழி பாவங்க ளாகிய இழிந்த கருமங்களைச் செய்வதற்கு ஒல்குதலே நாண மாதலான், நலம் வேண்டி ஏம மாக நாணினைக் கொள்வர் அறிவிற் சிறந்த மக்கள். பழியின் கண் புகாத குணத்தை யுடைய மக்கள் உலகத் துயிர்கட் கெல்லாம இனியவ ராதலின், உலகத்தார், தம் அறிவுடைய மக்களைத் தம் பொருளென்பர். நற் பண்புடைய இனிய மக்களே இல்லறத்தின் புத்துயிர்கள் போல்வர். இல்லறமின்றி இயலாது

உலகமும் மன்னுயிர்ப் பெருக்கமும். எனவே, நன் மக்களது சீர்த்தியும் மரபும் நாடு முதலியவற்றையே சார்ந்து நிற்கும். மனைக்கு மங்கலத் திரு வென மக்கள் வாய்ப்பது, தாய் தந்தையர்தம் தூய நிறைமுறை யாய வாழ்வினையும், அன்புப் பொறுமையினையும், உண்மை யொழுக்கப் பெருக்கினை யும் பொறுத்துள்ள தென்பது கருதற் பாலது. நன் மகவினை யில்லார் பொன்னுடைய ரேனும், புகழுடைய ரேனும், மற் றென்னுடைய ரேனும் உடைய ரல்லர். அறப் பயனும் நுகர்வாரில்லை. எனவே, இல்லறக் கடன்களைப் பழி பாவத்திற் கிடனின்றி செவ்விதே ஆற்றி வாழ்வார், அவ் வில்லறத்திற்குச் சிறந்த இலக்கண மாகிய நல்ல மகாரைப் பெறுதலினால் நல்லுலக இன்பினை ஈண்டே பெறுவர். அவரது எழு பிறப்பிலும் தீயவை சாராது. மற்றும் அறிவறிந்த மகவினை யுடைமை, ஒருயிர்க்கு அரணுதல் ஒருதலை யாதலான், மனந் தூயவர், தமக்கு நன் மக்கட் பேறுடைமையே ஏம மாகக் கொள்வ தன்றி, வியன் ஞாலத்தைக் கொள்ள விரும்பார். ‘எழு பிறப்புந் தீயவை தீண்டா பழிபிறங்காப், பண்புடை மக்கட் பெறின்’ என்பது பொய்யாமொழி.

தினைத் துணை நன்றியையும் பனைத் துணைய வாகக் கொள்ளல் வேண்டு மென்ற கருத்துக் கொண்ட வள்ளுவப் பெருந் தகையார், நன்றி மறப்பது நன்றன் றெனக் கூறிப், பின் ‘எந்நன்றி கொன்ருர்க்கு முய்வுண்டா முய்வில்லை, செய்ந் நன்றி கொன்ற மகற்கு’ என மொழிந்தார். செய்ந்நன்றி கோறல் ஈடேற்ற மில்லாத குற்றமா தல்பற்றி, அதனை அறவே நீக்குதல் வேண்டும். இதுபற்றி யன்றே, ஆசிரியர் வள்ளு வனர், தம்மிடத்து உற்ற துன்பத்தை நீக்கினவருடைய நட்பை அப் பிறப்பிலே யன்றி, வினைப் பயன் தொடரும் எழு வகைப் பிறப்பிலும் நினைப்பர் நல்லோர் எனக் கூறியுள்ளார். ‘எழுமை யெழுபிறப்பு முள்ளுவர் தங்கண், விழுமந் துடைத்தவர் நட்பு’ என்பது திருவள்ளுவப் பயன். எனவே, பிறர் செய்த நன்றியை மறந்தவர், தம் எழு வகைப் பிறப் பிலும் தீவினைத் துன்ப மொன்றையே அனுபவிப்பார். தீய பயத்தல் தீவினைக்கு ஒத்த தாதலின், சான்ருேர் எக்காலத் தும் தமக்கு நன்றி செய்த குற்ற மற்ருரது நட்பைப் பேணுவர். ஆகவே, பிறர் செய்த நன்மையை மறவாமை ஒருயிர் உறுதியாகக் கைக்கொள்ள வேண்டற்பாலது. அஃது

அவ் வுயிர்க்கு அரணாக விளங்குவதில் ஏதொரு ஐயமும் இலது.

நன்றி செய்தவரிடத்து, நடுவு நிலைமையி னீங்கா தொழுகுபவர், அந் நன்றியை நினைத்த ஞான்று அறத்தின் வழுவாது ஒப்ப நிற்கும் அவரது நிலைமை கெடு மாதலான், அவ்வாறு அவ்விடத்துங் கெடாம லிருப்பதற்காக நடுவு நிலைமை எல்லா அறங்களுள்ளும் தலைசிறந்த தென்றும், நடுவுநிலை தவறுதவரது செல்வம் தன்னளவிலுங் கேடின்றியே நின்று, அவர் எச்சத்திற்கும் கேடு வாராமற் காவலாதலை யுடைய தென்று திருவள்ளுவப் பெரியார், 'செப்ப முடையவ னாக்கஞ் சிதைவின்றி, எச்சத்திற் கேமாப் புடைத்து' என, அறத்தின்கண்ணின்று செய்த நன்றி யறிதலோடு மாறு கொள்ளா நடுவு நிலைமைக்கும் எச்சத்திற்குமுள்ள தொடர் பைத் தெள்ளத் தெளிய மொழிந் தருளினர். மற்றும், நடுவு நிலைமை விழுமிய பயனை நல்லோர்க்கும் அல்லோர்க்கும் அளிக்கு மென்பதை உணர்த்து வதற்காக,

> 'கெடுவல்யா னென்ப தறிகதன் னெஞ்ச
> நடுவொரீஇ யல்ல செயின்.'
>
> 'கெடுவாக வையா துலக நடுவாக
> நன்றிக்கட் டங்கியான் றாழ்வு.'

என்ற வாயுறை வாழ்த்துக்கள் எழுந்தன வென்பது ஈண்டு அறியத் தக்கது. எனவே, நடுவு நிலைமையால் அறம் பொரு ளின்ப மாகிய பயன்கள் இம்மையில் மிக விளையா தொழி யினும், அது வரும் பிறவிகளிலும் தொடர்ந்து, நல் வாழ்வுப் பயன்களை உயிர்க் களித்து, அரணாகவும் விளங்கு மென்பது தேற்றம்.

பிறர் குற்றம்போல் தன் குற்றமுங் காணும் நடுவு நிலைமை யுடையவன், அறியப்படுவனவும் அடக்கப்படுவனவும் அறிந்து, நெறியினானே அடங்கும் மாண் புடையோ னாவ னென்பது ஒருதலை. மன மொழி மெய்களை யடக்கி யொழு கும் ஒழுக்கம ஒருவருக்கு வாய்க்கப் பெற்றால், அன்னார்க்குச் சிந்தனை தூய வழியில் பெருகும். அச் சிந்தனை வழியே அவருக்கு மெய்ப் பொருள் தோன்றும். மெய்ப் பொருள் அடக்க முடையாருக்குத் தோன்றுங் காரணத்தால், அவ்

வடக்கம் அவரை வானுறை தேவரிடத்தே கொண்டு செலுத்தினும் செலுத்தும். இத்துணைச் சிறப்புப் பொருந்திய அடக்க முடைமை ஒருவர்பா லுளதாயின், அஃது அவரது எழு பிறப்பின் கண்ணும் காவ லாதலை யுடைய தாம். 'ஒருமையு ளாமைபோ லைந்தடக்க லாற்றி, னெழுமையு மேமாப் புடைத்து' என்பது பொதுமறை. ஆமை தன் ஐந்துறுப்பினையும் தன் புறவோ டொன்றனுள் தனக்கு ஊறு நேரா வண்ணம் அடக்கித் தற்காத்துக் கொள்ளுதற் போன்று, ஒருவர் ஒரு பிறப்பிலே ஐம் பொறிகளையும் தமது மனமாகிய ஒன்றில் அடக்க வல்லராயின், அவ் வன்மை, அவருக்கு எழு பிறப்பின் கண்ணும், தீவினையால் ஊறு வாராமற் பாது காக்கு மென்பதைப் புலப் படுத்த, 'ஏமாப் புடைத்து' என வள்ளுவர் கிறுவிக் காட்டிய திறன் உணரற் பாலது. எனவே, மனம், மொழி, மெய் வகையான் வரும் அடக்கம் உயிர்க்கு எழு வகைப் பிறவிகளிலும் தொடர்ந்து, விழுமிய உறுதி பயக்கும் பயன்களை விளைத்தும் அரணுதல் கண்கூடு.

மன, மொழி, மெய்களையும் அடக்கி, அதனுடன் சிறப்பாக வெகுளியையும் அடக்கித் திகழும் ஒருவன், பெருமிதத்தை அடக்க வல்ல மெய்க் கல்வியு முடையவனு யிருப்பின், அவன் பால் அறக் கடவுள் தாமே வந்தடையு மென்பது வள்ளுவர் கருத் தாதலான், மாந்தர்க்குக் கண்ணிணை யாகும் கல்வி எவ் வாறு உயிரை உய்யு நெறியில் உறுவிப்ப தென்பதனை ஆய் வது ஏற்புடைத்து. கல்வி தன்னை யுடைய மக்களுக்கு ஒளியையும் புகழையும் நல்கி, ஏனைய நலன்களையும் எய்தற் குதவும். கல்வியின் நோக்கத்தைப் பற்றியும், கற்று ரெய்தும் பயனையும் குறித்துச், செழுந் தமிழ்ப் பனுவல்கள்,

'சீரள வில்லாத் திகழ்தரு கல்விச்செம் பொன்வரையின்
ஆரள வில்லா வளவுசென் றூரம் பலத்துணின்ற
ஓரள வில்லா வொருவ னிருங்கழ லுன்னினர்போல்
ஏரள வில்லா வளவின ராகுவ ரேந்திழையே'

—மாணிக்கவாசகர்.

'கைப்பொருள் கொடுத்துங் கற்றல் கற்றபின்
கண்ணு மாகும்
மெய்ப்பொருள் விளக்கு நெஞ்சின் மெலிவிற்கோர்
துணையு மாகும்

பொய்ப்பொருள் பிறகள் பொன்னும் புகழுமாம்
துணைவி யாக்கும்
இப்பொரு ளெய்தி நின்றீ ரிரங்குவ
தென்னை யென்றான்' —திருத்தக்கதேவர்

அறம்பொரு ளின்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையு நாட்டும்—உறுங்கவலொன்
றுற்றுழியுங் கைகொடுக்குங் கல்வியி னூங்கில்லை
சிற்றுயிர்க் குற்ற துணை —குமரகுருபரர்

எனப் பகர்வதினான், கல்வியின் இன்றியமையாமை அறியப் படும். ஆயுந்தோறும் இன்பந் தருங் கல்வி, கற்றறிந்தவரைப் பண்படுத்தியும், உண்மையினை உணர்த்தியும், உயர் நெறியிற் செலுத்தி, அன்புடையராகவும், அருளுடையராகவும், நடுவு நிலைமை யுடையராகவும், வாய்மை யுடையராகவு மாக்கி, அன்னாரை எல்லா நலங்களிலும் நிலைபே றடையச் செய்தலினான், அது பேரறத்திற்குங் கருவியாத லென்பதற்கு ஐயமின்று. உற்றுழி யுதவுங் கல்விபோல் உறுதுணை யாவது பிறிதில்லாததனான், ஒருவருக்கு ஒரு பிறப்பிலே கற்ற கல்வி எழு பிறப்பினும் தொடர்ந்து நன்னெறிக்கண் ணின்று ஏமமாதலை யுடைத் தென்பதனை,

'ஒருமைக்கட் டான்கற்ற கல்வி யொருவற்
கெழுமையு மேமாப் புடைத்து'

என்ற குறண் மணியினு னுணர்க.

கற்றலின் பயனாவது, அறிவு பல்குதலும், அதனான் இன்ப நுகர்தலுமே யாம். மற்றும் உலகத்தோ டொட்ட வொழுகல் கற்றலைவிடப் பெருவலி யுடைத்து. ஒத்தது அறிந்து, உயிர் வாழ்பவரது அறிவினா லாம் பயன், 'அறிவற்றங் காக்குங் கருவி செறுவார்க்கு, முள்ளழிக்க லாகா வரண்' என்ற ஓரடி முக்காலாலும் உணர்த்தப்படுவதான் தெளியப்படும். அறிவு, அற்றங் காக்குங் கருவி யாதலோ டமையாது, பகைவராலும் அழிக்க வொணு உள் ளரணு மாகு மென்பதும், இக்குறளாற் பெறப்படும். ஆகவே, அறிவதறிந்து அடங்கி, அஞ்ச வேண்டிய தீச் செயல்களைச் செய்தற்கு அஞ்சித், தம்மை நீங்காதன வாகிய பேரறங்களை உலக முவப்பச் செய்து, அதனானே

மகிழ்ச்சியுற்று வாழும் இயல்பினர் எஞ்ஞான்றும் துன்புறுத லிலை யென்பது கருதப்படும்.

இவ்வாறு உண்மை நூற் கல்வியாலும் அறிவானும், விழுமிய பண்புகளும், உயர்ந்த எண்ணங்களும் கொண்டு, அதனானே மகிழ்ச்சியுட் டிளைத்திருக்கும் மக்கள், பிறப்பு உண்டானது தொடங்கி இன்னாத தென்று உணர்ந்து, தமக் குரிய பண்பாற்றும் நெஞ்சத்தவர்களோடு நண்பாற்றி நட்புக் கொள்ள வேண்டும். மற்றும், தமக்கு இன்னாதனவாயும் பொருந்தாதனவாயு முள்ள குணங்களை யுடைய தீயார் கேண் மையினைக், கல்வி யறிவு வாய்க்கப்பெற்றவர்கள் அறவே நீக்க முயலவும் வேண்டும். அஃதே அன்னவர்க்கு ஊதிய மென்ப தாகும். என் னென்றால், கேட்டிற்குக் காரண மாயவற்றை அறியாத இயல்புடையார்பால், விலங்கின் றன்மை யாகிய கொடுமையும், மருளும், தன்னயங் கருதலும் இயற்கையாகவே விளங்குன்கிறமையா னென்க. பேதை, ஒரு கால் பெருஞ் செல்வமதை உற்ற விடத்தும், எழு பிறப்பினும் தான் புக் கழுந்தும் நிரயத்தினை, இவ் வொரு பிறப்புள்ளே, தான் செய்யும் செயலாலே, செய்ய வல்லவ னென்பது 'ஒருமைச் செயலாற்றும் பேதை யெழுமையுந், தான்புக் கழுந்து மளறு' என்ற குறள் வெண்பாவால் அறியப்படும்.

அறிவில் மேம்பட்ட உயர்ந்தோர், அருள் சுரந்த எண்ணத்துடன், ஏனைய மாந்தரோடு ஒரு நன் முயற்சியில் ஈடு பட்டிருக்கையில், அவ் வருட் செய்கை வழிப்பட்ட அவரது தூய எண்ணம், மிகவும் முறுக்கு பட்டு, வலிவேறி, மற்றவரது எண்ணங்களைத் தன்பால் இழுத்து அடக்கி ஆளும் தகைமை யுடைய தாகின்றது. அவ்வாறு முயற்சியின்கண் முனைந்து நில்லாக் காலங்களில், அறிவுடையார் பெரும்பாலும் பேதைய ரோடு கூடி யொழுகின், அவர்தம் நல மல்லாதனவுந் தீயனவு மாகிய எண்ணங்கள், பெரியோரது உள்ளத்தைத் தாக்கி, அவருக்குக் கேடும் கவலையும் துன்பமும் விளைவிக்கும். எனவே, அறிவினன் மேம்பா டுற்ற பெரியோர், தம்மில் உயர்ந்த அல்லது தம்மோ டொத்த அறிவுடையார்களுடன் கூடியிருந்தால், அவ்வாறு கூடி யிருப்பவரது நல் லெண்ணங் கள் யாவும் இவரது உள்ளத்தில் பதிந்து, இவருக்கு அறிவு விளக்கமும் எல்லையில் இன்பமும் தாமே வந்து கைகூடும்.

எனவே, இத்தகைய இன நல மிக்குடையார் கேண்மையே திறம். மன நன்மையால் மாண் புற்ற பெரியார், இன நலத்தினுல், இவ்வுலகில் நிகழ்ந்து இறவாது நிற்பதாகிய நற்புகழை யுடைய ராதலான், அத் தகையார், அறிவை வேறுபடுத்தி, இருமையும் கெடுக்கும் இயல்பின ராகிய தாழ்ந்தோ ரினத்தில் சேர்ந் தொழுகாம விருப்பதற்குத், திருவள்ளுவப் பெரியார், சிந்தாமணி போல், நீதிப் பொருள்களை விளங்க வைக்கும்,

'மனநலத்தி னுகு மறுமைமற் றஃது
மினநலத்தி னேமாப் புடைத்து.'

'மனநல நன்குடைய ராயினுஞ் சான்ருேர்க்
கினநல மேமாப் புடைத்து.'

என்ற செழுந் தமிழ்க் குறள் வெண்பாக்களை வழங்கி யுள்ளார். இப் பாக்களின் உட்கருத்தை உண் ணுேக்கி, உளம் நெகிழ்ந் தாய்வோர்க்குச், சிற்றினஞ் சேராது இன நன்மை யுடைமை, நல்லுயிர்க்கு அரணுகச் சிறந்து திகழ்தல் புலனுகும். மற்றும், இன நன்மை யுடைமையோடு, நுண்மா ணுழை புல முடைய சான்ருேர், அறிவு; ஆண்மை, பெருமை என்ற மூவகை ஆற்றலுடன், உயர்ந்தோரால் புகழப்பட்டவற்றைக் கடைப்பிடித்துச் செயல்வேண்டு மென்பது உலகத் தெப்பா னுலோர்க்கும் துணிவு. அவ்வாறு செய்யாதும், வீரமும், மானமும், நல்ல வழிச் செலவும், தெளி வுடைமையு மோராது இகழ்ந்தவருக்கு எழுமையிலும் நன்மை யில்லை. இதனையே,

'புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டுஞ் செய்யா
திகழ்ந்தார்க் கெழுமையு மில்'

எனச் செந்நாப்போதாரும் அருளிச் செய்வா ராயினர்.

அரணுகத் திகழும் இன நலம், மன நலத்தையும், குண நலத்யையும் பெருக்கி, விண் ணின்பமு மளிக்கும். இதனு னன்ருே, வள்ளுவப் பெரியார். 'நல்லினத்தி னூங்குந் துணை யில்லை' என மொழிவா ராயினர். நல்லினத்தால், மனமும், இச்சையும், செயலும் மாசற் ருெளிரு மாதலான், இனந் தூயவர் ஒன்ருேற்றுப்படுத்தல் மூலம், நரை, திரை, மூப்பு முதலிய வற்ருல் மொத்துண்ணுது, மெய்ப் பொருளைக் காணும் முயற்சியில் திளைத்துத், தமது ஆற்றலை யோக அறிவு வளர்ச்சி யில் முகிழ்த்திடச் செய்து, சித்த எழுச்சி விகார மின்றித்,

துன்பம் நேர்ந்துழி இழியாதும், இன்பம் வந்துழிப் பூரிப்பில்லாதும், ஒருமை நிலை எய்தி உய்யும் வழி நாடுவர். இவ்வாறு ஒருமைப் பட்ட மன வுறுதியால் ஐந்தடக்கித், தமது மனனை அகமுகப்படுத்த வல்லவருக்குக் குண்டலி எனும் பராசக்தி தனது உறக்கத்தி லிருந்து எழுந்து, ஆறு, உயரிய சிவ சக்தி தத்துவங்களை மலரச்செய்து, இன்ப நலம், நல்லொழுக்க நிலை, மெய்க்கலை யறிவு, ஒன்றிப்பு சித்தி, அருட் புலமை அமைதி, ஓதா உணர்வு நிலையும் அருளி, இறுதியாக ஏழாவது நிலையில், தன்னிலை பெற்ற மனம், அலையாத அமைதியில், பரம சிவத்தோடு அருளுணர்வால் ஒன்றிக் கலந்து, இன்பத்தில் நிலைத்து விளங்கும். இறை யின்பம் தளிர்க்கவே, இறைவன் உண்மை நிலை புலனாகும். இந்நிலையில், ஊனுடலை இருப்பிடமாகக் கொண்டு வாழும் உயிர்களெல்லாம் இறைவன் அருள் விளக்கமாகத் தோன்றும். இவ்வாறு தன்னுயிரில் மன்னுயிரைக் காணும் இன மன நல்லார்களது உயிர்களுள் இறைவன் மன்னி, அவ்வுயிர்களை ஏழு உணர்வு நிலைகளிலும் செலுத்தி, அறிவினையும் மலரச் செய்து, தன்னுடன் இரண்டற இணைத்துக் கொள்வதினுன், இன மன நல்லார் கூற்றையும் கடந்து, பிறப் பற்று, வையத்தே விண்ணகத் தரசின் செல்வத்தையும் பேரின் பத்தையும் நுகர்வர். இத் தகைய வாறு உடலோடு பேரின்பம் பெறும் நிலையுடைய பெரியார், பிறவி நோயுறுது பிறரைக் காப்ப ராதலான், இவரது கேண்மையும் துணையும் மன்னுயிர்க்கு எழுமையும் ஏமாப் பாகும்.

இதுகாறும் கூறிய வாற்ருல், விலக்கியன ஒழிதல் அறமென்ப வாதலின், மக்கள், தம் வாழ்க்கையில் நல்லன கண்டு, நற்பேறு தரும் நல்லொழுக்கத்திற்கு அரண் செய்து நிற்பனவற்றைத் தாழாது போற்ற வேண்டுமென்பதூஉம், அவ்வாறு உயிர்க்கு எழுமையும் ஏமமாகக் கருதப்படும் நாணுடைமை, நன் மக்கட் பேறுடைமை, அடக்க முடைமை, கல்வியுடைமை, இன மன நல முடைமை முதலியனவற்றை ஓம்புவது வையத்தே உய்யும் வகையின் உயிர்ப்பு மென்பதூஉம் பெறப் படும்.

பரத சாத்திரம்

முதலாவது
பாவ வியல்

(முற்றொடர்ச்சி துணர் 23, மலர் 8, பக்கம் 208.)

(இ-ள்) மான் றலைக் கை யென்பது-மோதிர விரல் நடு விரல், சுட்டு விரல்களை வளைத்து, மற்றைய விரல்கள் இரண்டினையும் நீட்டுத லாம். இதன் றொழில்-முன் னிற்பவர் முக நோக்கி யழைத்தல், தாது பார்த்தல், திரு வெண்ணீ றிடல், மயிரை வகிர்ந்து கோதுதல், நெற் றியின் வியர்வு துடைத்தல், எழுத்தாணி பிடித் தெழுது தல் முதலிய வாம் – எ-று. (உ௬)

எ- வது. பற்ம கோசக் கை

பற்ம கோசம் பகரில் ஐ விரலும்
விற்கிணை யாக மேனோக்க விரித்தல்
செப்பிய விக்கரச் செயலினைக் கேண்மதி
கப்பரை[1] காந்தள் கஞ்ச மலர்க்[2] கிணை
தைப்புறு தொன்னை பொற்கிண்ணந் தாங்குதல்
விந்தைசேர் வேலிக்[3] குவமானம் விளம்பல்
ஐந்தலை நாகத் தணிமுடி காட்டுதல்
பனைமா தெங்கு பருவிளங் கனியின்
வளையிணை குறித்தல் வாளுடி[4] காட்டுதல்
பருங்கல் லெடுத்துப் பகைவர்மே லெறிதல்
விரும்பியே கொங்கையி னகக்குறி வைத்தல்
பஞ்சாக் கினிக்குப் படிவங் கூறல்
அஞ்சு மூர்த்தினிக்[5] கபிநயங் காட்டுதல்
தேவிசா முண்டி தெரிசனைக் கிதுவாம்

---

1. மண்டைப் பாத்திரம். 2. தாமரை மலர்.
3. விந்தை சேர் வேலி–ஐவேலி. ஐ-வியப்பு. விந்தை என் னும் சொல்லும் வியப்பு எனப் பொருள்படும்.
4. ஆடி-கண்ணாடி 5. அஞ்சுதலை.

ஓவறு கொற்றக் குடைக்கிணை யுரைத்தல்
தீப நீ ராஞ்சனஞ்[1] சிறப்புட னெடுத்தல்
தாபதர்க் கிறைமுனி[2] சாற்றின ரன்றே.

(இ-ள்) பற்ம கோசக் கை[3] யென்பது-ஐந்து விரல்களும் மேனேக்க விற்போல் வளைத்து விரித்தலாம். இதன் தொழில்-கப்பரை, காந்தட்பூ, தாமரை மலருக்கு உவமை காட்டல், தொன்னை, கிண்ணங்களைத் தாங்குதல், ஐவேலிக் காய்க் குபமானங் காட்டல், ஐந்து தலை நாகங் காட்டுதல், பனம்பழம், மாம்பழம், தேங்காய், விளாம்பழமிவற்றிற்கு இணை காட்டல், கண்ணடி காட்டல், பகைவர்மேல் கல்லெறிதல், பெண்கள் ஸ்தனங்களில் நகக் குறி வைத்தல், பஞ்சாக்கினிக்கு உவமை காட்டல், ஐந்து தலைக்கு அபிநயங் காட்டல், பார்வதி, சாமுண்டியின் தரிசனை காட்டல், குடைக்கு உபமானங் காட்டல், தீபாராதனை காட்டல், நீராஞ்சன மெடுத்தல் முதலியவாம் - எ-று. (உஎ)

அ-வது. சிலீமுகக் கை.[4]

சிலீமுகம் பெருவிர லின்னக நுனியினை
நலமுறு தற்சனி[5] முன்வரை நாட்டி
மத்திமை[6] யனுமிகை[7] கடைவிரல் நுனிகளை
உத்தம வங்கையி னுள்ளே யூன்றுதல்
அடைவுட னிதன்றொழில் தனையறி விக்கின்
திடமுட னம்பு சேர்பெறக் காட்டல்
தூரத்துப் பொருளைச் சுட்டிக் காட்டிடல்
ஆரத் தெய்வமொன் றுமென வறைதல்
நாடிப் பகைவர் நடுக்க அச் சுறுத்தல்

---

1. நீராஞ்சனம்-ஆலத்தி. 2. அகத்திய முனிவர்.
3. இது பதும கோசிகம் என அடியார்க்குநல்லாரால் வழங்கப் பெறுகிறது. 'பதும கோசிகம் பகருங் காலை, யொப்பக் கைவளைத் தைந்து விரலும், மெய்ப்பட வகன்ற விதியிற் றாகும்' என்பது அவர் காட்டும் இலக்கணம்.
4. சிலீமுகம்-அம்பு. அம்பின் உருவங் காட்டுதற் குரியதாகலின், சிலீமுகக் கை எனப்பட்டது.
5. தற்சனி-சுட்டு விரல்.
6. நடு விரல்.
7. அனுமிகை-மோதிர விரல்.

நீடு சலாகையை[1] நீட்டிக் காட்டுதல்
ஆண்மக னென்றே யறைகுதல் குத்துதல்
மாணச்[2] செங்கோல் வடிவினைக் காட்டல்
என்றே தென்றல் முனி[3] யிசைத் தனரே.

(இ-ள்) சிலீமுகக் கை யென்பது—பெருவிரலின் நக நுனியினைச் சுட்டு விரலின் முன் வரையி லூன்றி, நடு விரல், மோதிர விரல், சுண்டு விரல்களின் நக நுனியை உள்ளங் கையில் ஊன்றுத லாம். இதன் தொழில் – அம்பி னுருவங் காட்டல், தூரத்தி லுள்ள பொருள்களைச் சுட்டிக் காட்டுதல், தெய்வம் ஒன்றே யென் றறிவித்தல், பகைவர் பயப்படும்படி பயமுறுத்து தல், சலாகையின் உருவங் காட்டல், ஆண்பிள்ளை யென் றறிவித்தல், குத்துதல், செங்கோ லுருவங் காட்டல் முதலியவாம் - எ-று. (உஅ)

கூ-வது. தேசி முட்டிக் கை[4]

தேசி முட்டியைச் செப்பிடு காலை
ஆசில்[5] தற்சனி யாதிநால் விரல்நகம்
அங்கையிற் பொருந்த அழுத்திப் பெருவிரல்
பொங்கமா மேலே பொருந்தத் தழுவுதல்
இக்கரஞ் செய்யு மியல்பினை யுரைப்போம்
மிக்க பரிசை[6] வில்வாள் வேல்மழு
தக்க சூலந் தண்டுகைப் பிடித்தல்
வேதின[7] மாக்கால் வெங்குயம்[8] பற்றுதல்

---

1. நீண்ட இருப்புக் கம்பி.
2. மாண—பெருமை பொருந்த.
3. தென்றலின் பிறப்பிட மாகிய பொதியத்தில் வாழ்தல் பற்றி, அகத்தியரைத் தென்றல் முனி என்றூர்.
4. இதனை முட்டி யென்பர். 'முட்டி யென்பது மொழியுங் காலைச், சுட்டுவிரல் நடுவிரல நாமிகை சிறுவிர, லிறுக முடக்கி யிவற்றின்மிசைப் பெருவிரல், முறுகப் பிடித்த முறைமைத் தென்ப' என்பது அடியார்க்கு நல்லார் காட்டும் இலக்கணம்.
5. ஆசு-குற்றம். 6. கேடகம்.
7. வேதினம்-மா முதலியவற்றை அறுக்கும் ஈர்வாள்.
8. குயம்-தனம்.

தீதில் அறநெறி செப்புதல் செருநரின்[1]
தேகந் தன்னைத் திண்மையாக் குத்தல்
முட்டி யுத்த[2] முயங்குதல் முன்னனைக்[3]
குட்டிக் கொள்ளல் கொடுத்திடல் பிச்சையை
சின்ன மெக்காளஞ் சீருடன் பிடித்திடப்
பன்னினர் செந்தமிழ் பகர்திரு முனியே.

(இ-ள்) தேசிமுட்டிக் கை யென்பது—சுட்டுவிரல், நடுவிரல், மோதிரவிரல், சுண்டு விரல்களின் நகங்கள் உள்ளங்கையிற் பொருந்த வூன்றிப், பெருவிரலை மேலே தழுவி அழுத்தலாம். இதன் தொழில்—கேடகம், வில், வாள், வேல், மழு, சூலம், தண்டம், இரம்பம், மரக்கால் ஸ்தனம் முதலிய பிடித்தல், அறநெறியைப் பற்றெனல், பகைவருடம்பைக் குத்தல், முஷ்டி யுத்தஞ் செய்தல், விநாயகரைக் குட்டி வணங்கல், ஈதல், பிச்சை யிடல், திருச்சின்னம், எக்காளம் பிடித் தூதல் முதலியனவாம்-எ-று. (உசு)

ய-வது சிகரக் கை.[4]

சிகரக் கையைச் செப்பின் நால்விரலும்
அகங்கையுள் வளைத்தே அங்குஷ்ட[5] நிமிர்த்தல்
இங்கிதன் தொழிலினை யியலுட னுரைக்கில்
அங்குசங் கைம்மணி யலகு முசலம்[6]
துங்கவேல் ஈட்டி சூலஞ் சுளுக்கி[7]

---

1. செருநர்-படை வீரர்.
2. முட்டி யுத்தம்-குத்துச் சண்டை.
3. முன்னன் - முன்னே தோன்றிய பிள்ளை யாகிய விநாயகர்.
4. கோபுரம் முதலிய சிகரங்களைக் காட்டுதற்கு அடையாளமாதல்பற்றி இப் பெயர் பெற்றது. இதனை விற்பிடி என்பர் அடியார்க்குநல்லார். 'விற்பிடி யென்பது விரிக்குங் காலைச், சுட்டொடு பேடி யநாமிகை சிறுவிரல், ஒட்டி யகப்பால் வளையப் பெருவிரல், விட்டு நிமிரும் விதியிற் றாகும்' என்பது அவர் காட்டும் இலக்கண மாகும்.
5. அங்குஷ்டம்-பெருவிரல்.
6. முசலம்-உலக்கை.
7. சளுக்கி-கூரிய இருப்பு முட்கோல்.

தங்கெழுத் தாணி தன்னைப் பிடித்தல்
குழலினைப் பிடித்துக் கூட்டி முடித்தல்
அழகுமங் கையர்குயத் தவிர்நக முறுத்தல்
அங்கக் கடுப்ப[1] தகன் றிடக் குத்துதல்
மங்குல்[2]தோய் சிகரி மகாலிங்கங் காட்டுதல்
பங்கமில்[3] பதந்தனிற் பஞ்சின் குழம்பிடல்
ஐங்கரன் முன்போய் அணிசிரங் குட்டுதல்
இங்கா மெனவே யியம்பினர் குறுமுனி.

(இ-ள்) சிகரக் கை யென்பது—பெருவிரலை யுயர்த்தி, மற்றைய விரல்களை வளைத்து, விரல் நுனிகளை உள்ளங் கையிற் பொருந்த வூன்றலாம். இதன் தொழில் - அங்குசம், கைம்மணி, அலகு, உலக்கை, வேல், ஈட்டி, சூலம், சுளுக்கி, எழுத்தாணிகளைப் பிடித்தல், மயிரைக் கூட்டி முடித்தல், ஸ்திரீகள் குசங்களைப் பிடித்து நகக்குறி வைத்தல், தேக நோய் தீரக் குத்தல், கோபுரம், மகாலிங்கத் திற்கு உவமை காட்டல், பெண்கள் உள்ளங் காலிற் செம்பஞ்சின் குழம்பு பூசுதல், விநாயகருக்கு முன் சிரங் குட்டி வணங்கல் முதலியவாம்-எ-று. (கூ௰)

கக-வது சூசிகக் கை[4]

சூசிகக் கையே சுட்டு விரல்தனை
மாசற நீட்டி வணக்குதல் பெரு விரல்
மத்திமை யனுமிகை சிறுவிரல் மடக்குதல்
உத்தம விக்காத் துறதொழில் கேண்மின்
நிலவெழுத் தெழுதுதல் நேர்பொருள் காட்டல்
கலவியிற் கரிகா லீலைசெய் திடுதல்
அல்லல்செய் பகைவரை யச்சுறுத் திடுதல்

---

1. அங்கக் கடுப்பு-உடம்பின் வலி கடுப்பு.
2. மங்குல்-மேகம்.
3. பங்கம் இல்-குற்ற மில்லாத.
4. சூசிகக்கை - ஊசி போன்று அமைந்த கை. இதனைச் சூசி என்பர். 'சூசி யென்பது துணியுங் காலை, நடுவிரல் பெருவிர லென்றிவை தம்மில், அடைவுட னுற்றிச் சுட்டுவிரல் நிமிர, ஒழிந்தன வழிவழி, முடங்கி நிற்ப, மொழிந்தனர் மாதோ முடி பறிந் தோரே' என்பது அடியார்க்குநல்லார் உரை மேற் கோள்.

பல்லை வெளுக்கப் பாங்குடன் தோய்த்திடல்
சக்கரந் தன்னைச் சதிருடன் சுற்றுதல்
மைக்குறி விழியினில் மகிழுடன் தீட்டுதல்
அம்புதுன் னூசி[1] யடைவுடன் காட்டுதல்
வெம்பிச் சலித்தவர் மேன்மூக்கிற் சேர்த்தல்
நேம நிஷ்டை நியதிக் கடன்செயல்
தாமதஞ் செய்யே லெனத்தட்டிக் காட்டுதல்
மோகினி நிலையா முகுந்தனைக் காட்டுதல்
ஓகையாக் குறுமுனி யுரைத்தன ரென்ப.

(இ-ள்) சூசிகக் கை யென்பது-சுட்டு விரலை நீட்டிப், பெருவிரலை வளைத்து, நடுவிரல், மோதிரவிரல், சுண்டு விரல்களை மடக்குதலாம். இதன் தொழில்-பூமியில் எழுதுதல், நேரான பொருளைச் சுட்டிக் காட்டுதல், கரிகர லீலை செய்தல்[2],பகைவரைப் பயப்படுத்துதல், பல் விளக்கு தல், சக்கரஞ் சுற்றுதல், கண்களுக்கு மை யிடல், அம் புக்கும் குத்தூசிக்கும் உபமானங் காட்டுதல், வியசனத் தில் மூக்கில் வைத்தல், நித்திய கடன் முடித்தல், தாமதஞ் செய்யாதே யெனத் தட்டிக் காட்டுதல், மோகினி வேடங் கொண்ட திரிவிக்கிரம அவதாரங் காட்டல் முதலிய வாம் - எ-று. (௬௧)

௬௨-வது. கபித்தக் கை[3]

கபித்தக் கையே கனிஷ்ட மனுமிகை
நவிற்று மத்திமை நலமுடன் மடக்கி
அங்குட்டந் தற்சனி யணிநகங் கூட்டுதல்
இங்கிக் கைத்தொழி லியல்பினை யுரைக்கின்
தீப தூபஞ் சிறப்புடன் காட்டுதல்
தாப வேட்கைக்குச் சாந்தாற்றி[4] வீசுதல்
ஆசாரக் கவரி யாலவட் டந்தொடல்
பாசாங் குசமுடன் பகருமா லாத்தி
ஏந்துதல் ஈட்டி யெழுத்தாணி தீட்டுதல்

1. துன்னூசி-தைத்தற் குரிய ஊசி. துன்னல்—தையல்.
2. கலவி வகையுள் ஒன்று.
3. ‘சுட்டுவிரல் நுனியும் பெருவிரல் நுனியும் உகிர் நுனை கௌவிப்பிடித்து ஒழிந்த மூன்று விரலும் மெல்லெனப் பிடிப்பது’ என்பர் அடியார்க்குநல்லார்.
4. பூசிய சாந்தினைப் புலர்த்துவ தோர் விசிறி வகை.

வாய்ந்தபூக் கிள்ளல் மணிச்செப மாலிகை
கஞ்சத் தாளங் கருத்துடன் பிடித்தல்
இன்சொல் வாத்தியங்கோ லெடுத்து முழக்குதல்
தெரிவி லுருண்டை சேர் துலை[1] பிடித்தல்
பிரியமாப் பிதிர்க்குப் பிண்ட மிடுதல்
கொட்டைக் கொம்பு குலாவிச் சுற்றுதல்
நட்டணைப்[2] பம்பரம் நற்கவ ணெறிதல்
குற்றி யெறிமுளை கூடி யடித்தல்
பற்றியே மணிதனைப் பாங்குடன் கோத்தல்
நூனாழி[3] தன்னைப் பிடித்துதூக் கிடுதல்
மீன மிழுக்குந் தூண்டின் மேலிழுத்தல்
பற்கொம்பு பற்றிப் பல்விளக் கிடுதல்
விற்றனி லத்திர மேவி விடுத்தல்
அடித்தல் குத்தல் அறுத்தல் வெட்டுதல்
துடித்துப் பெண்கள் துகில்பிடித் திழுத்தல்
வாக்குடன்[4] விதையை மண்ணில் விதைத்தல்
மூக்கைப் பிடித்து நீரின் மூழ்குதல்
பற்றுக் குறடு பாங்குடன் பிடித்தல்
பற்றிய மகத்திற்[5] பரிந்துநெய் வார்த்தல்
மடித்த மெல்லிலையை[6] வாங்கிவாய் வைத்தல்
அடுத்த செயலுக் காமென் றுரைத்தனர்
பொருனைப் பொருப்பின் போதமா தவரே.[7]

(இ-ள்) கபித்தக்கை யென்பது, சுண்டு விரல், மோதிர விரல், நடு விரல்களை மடக்கிப், பெருவிரல் நக நுனியும், சுட்டு விரல் நக நுனியும் பொருந்தக் கூட்டுதலாம். இதன் தொழில்—தீப தூபங் காட்டல், வெப்பந் திரவிசிறி, கவரி வீசுதல், ஆலவட்டம், பாசம், அங்குசம், ஆலத்தி, ஈட்டிகளைப் பிடித்தல், எழுத்தாணி தீட்டல், பூக்கிள்ளல், சபமணி, வெண்கலத் தாளம் பிடித்தல்,

1. துலை-தராசு.
2. நட்டணை-இராட்டினம் எனப் பொருள் கொள்வர்.
3. நூனாழி-நெசவு தொழிற் குரிய நாடா. நூல் + நாழி = நூனாழி என்றாயது.
4. வாக்கு-திருத்தம் 5. மகம்-வேள்வி
6. மெல்லிலை-மென்று சுவைத்தற் குரிய வெற்றிலை.
7. பொருனை-தாமிரபரணி, பொருப்பு-பொதியம், மாதவர்-அகத்தியர்.

வாத்தியங்களைக் கோல் கொண் டடித்தல், வில் லுருண்டை செலுத்தல், தராசு பிடித்தல், பிதிர்களுக் குப் பிண்டமிடல், இராட்டினஞ் சுற்றுதல், பம்பரம், கவண் வீசுதல், குற்றிக் கட்டை, கட்டுத்தறி பிடித் துக் கடாவல், மணி கோத்தல், நாழி பிடித்து செய்தல், மீன் பிடிக்குந் தூண்டி விழுத்தல், பற் கொம்பு பற்றிப் பல் விளக்கல், வில்லில் அத்திரம் பிரயோகித்தல், அடிக்குதல், குத்துதல், அறுத்தல், வெட்டல், பெண்கள் துகில் பிடித் திழுத்தல், விதை விதைத்தல், மூக்கைப் பிடித்து நீரில் முழுகல், பற்றுக் குறடு பிடித்தல், ஓமத்தில் நெய் வார்த்தல், வெற்றிலைச் சுருளை வாங்கி வாய் வைத்தல் முதலியவாம் - எ-று. (௩௨)

௩௩-வது. கடகக் கை.[1]

கடகக் கரமே பெருவிரல் நகநுதி
திடமுடன் தற்சனி நகநுதி சேர்ந்து
பேடு[2] புன் விரலை வளைத்துப்பின் னிருவிரல்
நீடுற நீட்டுதல் நேருமிக் காத்தொழில்
அத்திரம் வில்லில் அடைவுடன் தொடுத்தல்
பத்திப்பூச் செண்டுபா சாங்குசந் தரித்தல்
நரப்புக் கருவியை நயமுற முறுக்கல்
திறமுறு துகிலிகை[3] சீருடன் பிடித்தல்
இந்த வகைக்கீ தாமென வியைந்தே
செந்தமிழ் முனிவர்[4] செப்பினர் மாதோ.

(இ-ள்) கடகக் கர மென்பது - பெருவிரல் நுனி யும் சுட்டுவிரல் நுனியும் பொருந்தச் சேர்த்துச், சுண்டு விரலை வளைத்து மற்றைய விரல்களை நீட்டுதலாம். இதன் தொழில்-வில்லில் அத்திரந் தொடுத்தல், பூச் செண்டு, பாசாங்குசந் தாங்கல், வீணை முதலிய நரப்புக் கருவி யைச் சுருதி கூட்டல், எழுதுகோல் கொண்டு வர்ண மெழுதல் முதலியவாம் - எ-று. (௩௩)

---

1. 'கடக முகமே கருதுங் காலைப், பெருவிரல் நுனியுஞ் சுட்டுவிரல் நுனியும், மருவ வளைந்தவ் வுகிர்நுனி கௌவி, யொழிந்த மூன்றும் வழிவழி நிமிர, மொழிந் தன ரென்ப முடிபறிந் தோரே'— அரங்கேற்று காதை யுரை மேற்கோள். 2. பேடு—சுட்டுவிரல்.
3. துகிலிகை—எழுதுகோல். 4. அகத்தியர்க்கு ஒருபெயர்.

உள நூல்

வித்துவான் திரு. M. குஞ்சிதபாத தேசிகர்,
தமிழாசிரியர், உயர்நிலைப் பள்ளி, திருவாரூர்.

மனத்தின் வேகம்.

வேகமாகச் செல்லுந் தன்மை யுடையது காற்று. இதனால் வேகத்திற்குக் காற்றை உவமிப்பது வழக்கம். மனங் காற்றைக் காட்டிலும் மிகுந்த வேக முடையது. இதனைச், 'செலவு மிகுந்த சிந்தையினில்' எனச் சேக்கிழார் பெருமான் கூறுவதால் தெரிந்து கொள்ளலாம்.

மிகவும் வேகமாக வருதலுக்கு மனத்தினையே பல நூலாசிரியரும் உவமித்திருக்கின்றனர். அவற்றுள் சில:

மனத்தினுங் கடிதுவந்து மருந்துகள் பிசைந்து ஆர்த்தார்.
—பெரியபுராணம்.

மனத்தினும் முடுகும்
—ஞானவாசிட்டம்.

மனக்குல மிடைந்து பின்காட்ட விசைகொண் டாடும்.
—அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ்

மனத்தினுங் கடிது செல்வேன்
—இராமாயணம்.

திக்கொடு திகாந்தமும் மனவேக மென்னவே
சென்றோடி யாடி வருவீர்.
—தாயுமானர்

கடல், மலை முதலிய இடங்கள் இடையிட்டு இருந்தாலும், பல காவதத்திற்கு அப்பால் இருந்தாலும், பல ஆண்டுகள் கடந்தாலும், நாம் பார்த்துப் பழகிய பொருளினிடத்து மிகவும் விரைவாகச் சென்று காணுந் தன்மை மனத்திற்கே உண்டு.

மேலே கூறியவற்றிலிருந்து மனம் வேகமாகச் செல்லும் இயல் புடையது எனல் விளங்குகிறது. மனத்திற்குச் செல்லும் ஆற்றல் உண்டா? என்ற ஐயம் தோன்றலாம்.

நாம் நடந்து செல்வதுபோலச் செல்லுந் தன்மை கிடையாது. முன் கண்டு கேட் டறிந்துள்ள பாவனைகள் மனத்தில் தங்கியிருக்கின்றன. அவற்றை நினைத்த மாத்தி ரத்தில் மனக் கண் முன் தோன்றுகிறது. இவ்வாறு ஊன்றி நினைக்கும்போது, எதிரில் இருக்கும் பொருள்கள் தெரிவ தில்லை. ஆதலால், மனம் வேறிடத்திற்குச் சென்றதாக எண்ணுகிறோம். 1170 ஆம் குறளின் விசேட வுரையில், பரிமேலழகர், 'மனத்திற்குச் செலவாவது நினைவே யாக லான்' எனக் குறித்திருப்பதால், நன்கு தெரிகிறது. மனஞ் செல்வதாக வைத்துக்கொண்டால் என் எனில், பத்து ஆண்டுகளுக்கு முன் பார்த்த ஊர் அல்லது வீட்டை நினைத்த மாத்திரத்தில் கண்முன் பார்ப்பதாகக் கருது கிறான். ஆனால், தற்காலம் வேறுவிதமாக மாற்றி யமைத் திருந்தால், (மாற்றி யுள்ள) உருவம் நினைத்தவனுக்குத் தெரியாது, நேரே சென்று பார்வையிடின், மாற்றி யமைத் ததும் தெரிகிறது. இதேபோல, மனஞ் சென்றிருக்கு மாயின், மாற்றிய வடிவமும் மனதிற்குத் தெரியவேண்டும். ஆதலால், அவ்வாறு கொள்ளுதல் பொருந்தாது. முன்னர்க் காலம் இடையிட்ட பொருள்களும், நாடு இடையிட்ட வையுந் தெரியும் என்றது ஊகித்தறிதலைத்தான் என்று கொள்க.

இதனால், மனம் வேகமாகச் செல்லுதல் என்ன என்ப தும், முன் பார்த்த பொருள்தான் மனக் கண்முன் தெரியும் என்பதும், முடிவாகக் கொள்க.

மன நலத்தை மறைக்க முடியுமா?

'மன நலமே மன்னுயிர்க் காக்கம்' என்றார் வள்ளுவர். மன்னுயிர்க்கு ஆக்கந் தருவ தாகிய மன நலத்தை மறைக்க இயலாது. மன நல முடையார்க்கு மறுவில் பொருள் வந்தாலும், மதிக்கும் ஏற்றம் உற்றாலும், உடனே நலம் பல பயக்கும் அறிகுறியைக் காணலாம்.

மன நல முடையார் பல்காலும் எண்ணிய எண்ணத் தால் மக்கள் பய னடைந்தே தீருவர். மன நலத்தை மக்கள் பலர் காண்பதில் நம் நன்மை யாதுளது என்று

மறைப்பினும், நினைப்பின் வழி உரை, உரையின் வழி செயல் ஆகிய சொற்செயல்களாலே ஓர்ந் துணர்ந்து அறிய இடமுண்டாக்கி விடுகின்றன.

சிறு முளை எப்போதும் அவ்வாறே யிருக்குமா? தளிர்த்துப், பூத்துக், காய்த்துக், கனியாகி, இன்பந் தருகின்றதல்லவா? அஃதே போல், நல் லெண்ணம் உரையாலும், செயலாலும் வளர்ந்து, மக்கட்கு, வளப்பமுறச் செய்து விடும். ஆகையால், எண்ணத்தை எவ்வாறு மறைக்க இயலும்? தீய எண்ண முடையாரும், சமயம் வாய்த்துழித் தீமை செய்வதால் உணர இடங் கொடுத்தே தீரும். சில நாள் வேண்டுமானல், தெரியாமல் மறைக்கலாம். பலாக் கனியைப் பார்க்காவிட்டாலும், மணத்தால் அறிந்து கொள்வதுபோலக், காரியத்தால் கண்ணுங் கருத்தும் வெளிப்படு மல்லவா? பண்பட்ட நிலத்தைப் பல னுள்ள விதை யடைந்தாற்போல, பண்பட் டுள்ள மனத்தில் எழுந்த எண்ணம் நன்மை யான செயலை யுண்டாக்காது இருக்குமோ? ஆகவே, மன நல முடையார் வெளிப்படை யாக இல்லாவிட்டாலும், உற்று நோக்குவார்க்கு விளங் காமற் போகாது என்பதும். காரியத்தால் மன நல முடை யாரையும், மன நல மில்லாரையும் யாவரும் எளிதில் அறிந்து விடுவர் என்பதும், உயிர்க்கு ஆக்கந் தருவது மன நலமே என்பதும் முடிவாகக் கொள்ளக் கிடக்கின்றன.

எனைத்தானு மெஞ்ஞான்றும் யார்க்கு மனத்தானா
மாணசெய் யாமை தலை.

மனந்தூயார்க்கு எச்சம்நன் றாகும்.

மனநலத்தி னாகு மறுமை.

என்னும் பொய்யாமொழியார் பொன்னுரைகள் போற்றிப் படிப்பார்க்குப் புத்துணர்ச்சி யூட்டாநிற்கும்.

நன்றி யுரை

திசம்பர்

நம் சங்கத்திற்கு நன்கொடை யளித்துள்ள செந்தமிழ்ச் செல்வர்கள்

இச் செல்வர்களின் பேரன்பினைப் பாராட்டி எங்கள் உளமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

(ஒவ்வொரு பெயரின் முன் 'திருவாளர்' என்பதும் பின் 'அவர்கள்' என்பதும் இணைத்துப் படிக்க.)

	ரூ.	அ.	ப.
வெ. பார்த்தசாரதி, தமிழ்ச் சங்கத் தலைவர், கராய்ச்சி	22	6	0
M. அப்பு வாண்டையார், நிலக்கிழவர், புளியக்குடி	5	0	0
நீ. கந்தசாமி பிள்ளை, சங்க அமைச்சர்	725	0	0
நிக்கல்சன் டவுன் பாங்கி, தஞ்சை	25	0	0
R. S. இராசன், சென்னை	25	0	0
கைலாய அற நிலையம்	62	8	0
அரசியலார் உதவித் தொகை :			
கரந்தைப் புலவர் கல்லூரி	2,935	0	0
திக்கற்ற மாணவர் இல்லம்	2,468	0	0
ஜினகுமார முதலியார், மணிகை, கரந்தை	5	0	0

	ரூ.	அ.	ப.
N. L. வேங்கடசாமி நாயடு, நெல் மண்டி, கரந்தை	35	0	0
ஸ்ரீ. கிருட்டினசாமி வன்னியர், நிலக்கிழவர், மேலைமாகாணம்	7	8	0
இராவ் சாகிபு ஐ. குமாரசாமி பிள்ளை, பி.ஏ. கரந்தை	10	0	0

1948, சனவரி, பிப்ரவரி.

இ. மா. கோபாலகிருட்டினக் கோன், மதுரை	1,120	0	0
இராவ் பகதூர் அ. வீரையா வாண்டையார், பெருநிலக்கிழவர், பூண்டி	750	0	0
வ. ம. கோ. சோமசுந்தரம் பிள்ளையும் உடன்பிறந்தாரும்	51	0	0
கரு. முத்து. தியாகராசச் செட்டியார், மீனாட்சி பஞ்சாலை, மதுரை	1,000	0	0
கூட்டுறவுப் பதிப்பகம், தஞ்சை	180	10	10
நீ. கந்தசாமி பிள்ளை, சங்க அமைச்சர்	250	0	0
N. L. வரதராசலு நாயடு, மளிகை, தஞ்சை	30	0	0
N. L. B. ஆழ்வார்சாமி நாயடு, மளிகை, தஞ்சை	20	0	0

வேண்டுகோள் :

அன்பீர்,

நலம், கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடாகிய தமிழ்ப்பொழில் இறைவன் திருவருளாலும், தமிழன்பர்களின் பேருதவியாலும், இருபதாண்டு களின் மேலாகத் தமிழ்ப்பணி யாற்றி வருகின்றது.

இதன் எதிர்கால வாழ்வு, கட்டுரை வழங்குவோர், இதழன்பர்கள் என்னும் இரு திறத்தினராகிய தமிழன்பர்களின் கையிலிருக்கின்றது.

குறைந்த எண்ணினரே இதழுறுப்பினரா யிருப்பதால், பொழிலை வள னுறச் செய்ய இயலா நிலைமையிலிருக்கின்றேம். ஆண்டுதோறும் கைப்பொருளை இழந்தும் வருகின்றேம். என்றாலும், சங்கத்தார் ஊக்கந் தளராது தமிழ்ப் பொழிலை வளர்த்து வருவது போற்றத்தகும் செயலா யிருக்கின்றது. அன்பர் கள் பலரும் உறுப்பினராகச் சேர்ந்தும், உறுபொருள் கொடுத்தும், புதுக் கருத்துடைக் கட்டுரைகள் எழுதியும், எவ்வாற்றானும் ஆதரித்து ஊக்க வேண்டுமென வேண்டுகின்றேம்.

கட்டுரை வழங்குவோர் நினைவில் வைக்கவேண்டிய செய்திகள் சிலவற்றை விளக்க விரும்புகின்றேம்.

1. கட்டுரைகள், தெள்ளத் தெளிந்த தீந்தமிழ் நடையில், விழுமிய பொருளை விளக்கமுற எழுதப்பெற்றன வாதல்வேண்டும்.
2. தமிழ்ப்பொழில் பக்கம் நான்கிற்குமேல் தொடராது கட்டுரை முடிவுபெறவேண்டும். நீண்ட பொருளா யிருக்குமாயின், இக் கூறிய அளவில் முடியும் சிறுபிரிவுகளாய் வகுத்து எழுதப்பெறல் வேண்டும்.
3. தமிழ்ப்பொழிலில் வெளியிடுதற் கனுப்பப்பெறும் கட்டுரை வேறெந்தத் தாளிலும் வெளிவந்திருக்கவும், வெளிவரவும் கூடாது

இவையன்றி,

சிறந்த முறையில் தமிழ்மொழி, தமிழிலக்கிய இலக்கணம், தமிழ்ப் புலவர் வரலாறு, சுவை மலிந்த தனிப் பாடல்கள், மொழி பெயர்ப்புகள், வெளிவாரா திருக்கும் அரிய நூல்கள், கலைப் பொருள்கள், புதிய கருத்துரைகள், ஆராய்ச்சி யுரைகள், இவை போல்வன பிறவும் எழுத வல்லவர்களை எழுதுமாறு ஊக்கவேண்டும் ; எமக்கும் அவர்களை அறிமுகப்படுத்த வேண்டும் ; தத்தமக்குத் தெரிந்த அன்பர்களைப் பொழிலுறுப்பினர்களாகுமாறு தூண்டவும் வேண்டும்.

இவ்வாறான உதவிகள், ஞாலத்தின் மாணப் பெரியனவாய்ச் சங்கத்தாரால் நன்றியுடன் மதிக்கப்பெறும்.

க. த. சங்கம்,
20—7—'47.

பொழிற்றொண்டர்.